# தமிழர் மருத்துவம் புலப்படுத்தும் அவர்தம் அறிவியல் அறிவு

*முனைவர் இரா. ச. சுகிர்தா பஸ்மத்*
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகர்கோவில்

மலர்: 10

சிறப்பிதழ்: 1

மாதம்: ஜூலை

வருடம்: 2022

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI: https://doi.org/10.34293/sijash.v10iS1-Jul.5056

அஃறிணை, உயர்திணை எனப் பாகுபடுத்தப்பட்டுள்ள உலக உயிர்கள் அனைத்தும் சில ஒற்றுமைகளைக் கொண்டுள்ளன. பிணி, மூப்பு, சாக்காடு இவை அனைத்து உயிர்களுக்கும் பொது வானவையாகும். இவற்றிலிருந்து எந்த உயிரினங்களும் தப்பிக்க முடியாது. இவை மூன்றும் தவிர்க்க முடியாதது எனினும் எவரும் இவற்றை மகிழ்ச்சியாக ஏற்றுக் கொள்வதில்லை. புத்தர் துறவியாகக் காரணமே இவைதான் என்பதிலிருந்து இவற்றின் வலிமையைப் புரிந்து கொள்ள முடியும். இவற்றுள் பிணி என்பது மிகவும் கொடுமையானது. “நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்” என்பது தமிழரின் மந்திர வாக்கு. நோய்கள் வரும் போது மருத்துவம் பார்த்தனர். உலக மக்கள் அனைவரும் இதையே செய்தனர். எனினும் தமிழர்தம் மருத்துவ முறைகள் சற்று வித்தியாசமானவை.

## தமிழர் மருத்துவம்

தமிழரின் வரலாற்றுக் கருவூலம் சங்க இலக்கியமாகும். சங்க இலக்கியத்தில் மருத்துவம் குறித்த ஏராளமான செய்திகள் உள்ளன. சங்ககாலத்தில் மருத்துவத்திற்கான தனிநூல் இருந்ததாகத் தெரியவில்லை. “சங்ககாலத் தமிழ் மருத்துவ நூல் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. இலக்கியம் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்றால் அதில் மருத்துவத்தின் பங்கையும் தெரிந்து கொள்ள இயலும். பத்துப்பாட்டு, எட்டுத்தொகை முதலான சங்க இலக்கிய நூல்களில் தமிழ் மருத்துவத்தின் பல சிறப்புக்களைக் காணலாம்” என ஜே.ஜோசப்தாஸ் கூறுகிறார். தொல்காப்பியம் முதற்கொண்டு தமிழ் இலக்கியங்கள் முழுவதும் ஏராளமான மருத்துவச் செய்திகள் நிறைந்துள்ளன. மருத்துவன் தாமோதரனார், மருத்துவன் நல்லச்சுதனார் எனும் பெயர்கள் சங்ககாலப் புலவர்கள் மருத்துவர்களாகவும் இருந்துள்ளனர் என்பதைப் புலப்படுத்துகிறது.

மன்னனின் படைத்தலைவர்களாக இருந்துள்ள ஆய், எயினன் எனும் குடியினர், “மருத்துவ சிகாமணிகள்” என்று அழைக்கப் பட்டுள்ளனர். எயினர் குலத்தில் வைத்தியத் தொழிலைப் பரம்பரையாகக் கொண்டிருந்த மருத்துவக் குடியில் பிறந்தவன் பாண்டியன் படைத்தலைவன் “மாறன் காரி” என்பது குறிப்பிடத்தக்கது என மு. இராகவையங்கார் குறிப்பிடுகிறார்.

தொல்காப்பியரின் திணைப் பாகுபாடு பல மருத்துவச் செய்திகளை உள்ளடக்கியுள்ளது. திணைப்பெயர்கள் அனைத்தும் மூலிகைப் பெயர்களாகவே உள்ளது இங்கு நோக்கத்தக்கது. தமிழர் மருத்துவ முறைகளைப் பயன்படுத்தினர் எனினும் சித்தர்களுக்குப் பின்பே அது தனி மருத்துவத் துறையாக வளர்ந்தது. சித்தர் மருத்துவம் என்பதே தமிழர் மருத்துவம் தான். சித்தர்கள் பல்துறை வித்தகர்கள், குறிப்பாக மிகச் சிறந்த அறிவியல் அறிஞர்கள். "உணவே மருந்து; மருந்தே உணவு" என்பதே தமிழர் தம் மருத்துவக் கோட்பாடு. இன்றைய நவீன மருத்துவ முறைகளையும் விஞ்சும் அளவில் தமிழரின் மருத்துவ முறைகள் இருந்துள்ளன. இவற்றை நோக்குமிடத்துத் தமிழரின் அறிவியல் அறிவும் புலப்படுகிறது.

## ஐம்பூதங்களும் மருத்துவமும்

இந்த உலகம் ஐம்பூதங்களின் கூட்டு எனும் மிகப் பெரும் அறிவியல் உண்மையைத் தமிழர் அறிந்திருந்தனர்.

***நிலம் தீ நீர் வளி விசும்போ டைந்தும்***
***கலந்த மயக்கம் உலகம் ஆதலின் (மர.1589)***

என்பது தொல்காப்பிய நூற்பா.

ஐம்பூதங்களுக்கும் தமிழர் மருத்துவத் திற்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. சித்தர்கள்

அனைவருமே சிறந்த அறிவியல் மேதைகளாகத் திகழ்ந்தவர்கள். இவர்கள் அனைவரும்,

***அண்டத்திலுள்ளதே பிண்டம்***
***பிண்டத்திலுள்ளதே அண்டம்***
***அண்டமும் பிண்டமும் ஒன்றே***
***அறிந்துதான் பார்க்கும் போதே***

எனும் திருமூலரின் கொள்கையை உடையவர்களே.

ஐம்பூதங்களின் மாற்றங்கள் அதாவது பருவமாற்றங்கள் மனிதஉடலிலும், உயிரியக்கத்திலும் பல மாற்றங்களை உருவாக்குகின்றன. இத்தொடர்பினை, 60 ஆண்டுகள் ஆகும் போது உடலில் ஒளி தேயும், அதாவது பிருத்வி எனும் மண் அப்புவை(நீரை) நெருங்கும். அப்பு தேயுவை(நெருப்பை)த் தாக்கும். 70 வயதில்தேயுவை வாயு(காற்று) தாக்கும். 80 வயதில் வாயு ஆகாயத்தைத் தாக்கும். 90 வயதில் ஆகாயம் ஆத்மாவைத் தாக்கும். அந்நேரம் மலமும் நீரும் அடக்கமின்றி பிரியும். 100 வயதில் ஆத்மாவில் ஒடுக்கப்பட்ட உயிர் வந்த வழியே பிரியும் எனச் சித்தர்கள் அறிவித்துள்ளனர்.உயிர் இயக்கத்திற்கும் ஐம்பூதங்களுக்கும் உள்ள தொடர்பைக் கணக்கிட்டு, மனித உடலின் தன்மைகளான வாத,பித்த, கப(காற்று, நெருப்பு, நீர்)என்பவற்றிற்கு ஏற்ப ஐம்பூத தத்துவங்களின் அடிப்படையில் மருத்துவம் செய்தனர். நவீன மருத்துவ முறைகளில் ஒரு நோயுடைய அனைவருக்கும் ஒரே மருத்துவம் செய்யப்படுகிறது. ஆனால் தமிழர் மருத்துவத்திலோ அவரவர் உடலின் தன்மைக்கேற்ப மருத்துவம் செய்யப்படுகிறது. இது வியக்க வைக்கும் அறிவியல் அறிவாகும்.

***மண்டிணிந்த நிலனும்***
***நிலனேந்திய விசும்பும்***
***விசும்புதைவரு வளியும்***
***வளித்தலையிய தீயும்***
***தீமுரணியநீரும் என்றாங்கு***
***ஐம்பெரும் பூதத்தியற்கை (புறம்.2)***

எனப் புறநானூறு ஐம்பூதங்களையும் குறிக்கிறது.

உடலின் இயக்கத்திற்கு நீர் மிக அவசியம். எல்லா மருத்துவ முறைகளும் நீரின் இன்றியமையாமை குறித்துப் பேசுகின்றன. நீர் சிகிச்சை முறைகள் முற்றிலும் அறிவியல் சார்ந்தவை. சில நோய்களுக்கு நீரே மருந்தாவதும் உண்டு. இந்த அறிவினை பண்டைத் தமிழ் மருத்துவர்களும் அறிந்திருந்தனர். தமிழர்கள் உண்ட உணவுகளும் மருந்தாகவே இருந்தன. உணவும் நீரும் அடிப்படைத் தேவைகள் என்பதை,

***நீர் இன்றி அமையா யாக்கைக்கு எல்லாம்***
***உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே***
***உண்டி முதற்றே உணவின் பிண்டம்***
***உணவெனப் படுவது நிலத்தொடு நீரே***
***நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு***
***உடம்பும் உயிரும் படைத்திசினோரே***
***(புறம்.18)***

எனும் பாடல் வழி அறியலாம்.

செய்யப்படும் மருத்துவம் உடலின் தன்மையைப் பொறுத்தே பயன் தரும். திருந்தியயாக்கைக்கே மருத்துவம் உதவும் என்பதை, "திருந்திய யாக்கையுள் மருத்துவன் ஊட்டிய மருந்து போல்" *(கலி.17)* எனும் வரி உணர்த்தும். மருத்துவ அறிவு இன்றி இத்தகைய இலக்கிய வரிகளைப் படைப்பது அரிது. தமிழர் மருத்துவம் செய்வதற்கு ஏற்ற காலத்தைக் கணித்தே செய்தனர். இது மிகப் பெரிய அறிவு. தொல்காப்பியர் சுட்டும் பெரும்பொழுது, சிறுபொழுது இவை தமிழ் மருத்துவத்தில் முக்கிய இடம் பெறுகின்றன. நோய்களைக் கணிக்க சிறுபொழுதும், மருத்துவம் செய்யவும் நோய் பரவுதலை அறியவும் பெரும்பொழுதும், நோயாளி வாழும் நிலத்தை அடிப்படையாகக் கொண்டு நோயை அறிவதற்கு இரு பொழுதுகளும் தமிழ் மருத்துவத்தில் முதன்மையாக்ப் பேசப்படுகின்றன.மூவகைக் காலத்தையும் ஆராய்ந்து கூறும் காலக் கணிதர்கள் இருந்தனர் என்பதை,

***மறுவில் செய்தி மூவகைக் காலமும்***
***நெறியின் ஆற்றிய அறிவன்***
***(தொல். புறத்.20)***

எனும் நூற்பாவால் அறியலாம். காலத்தைக் கணிப்பது மிகப் பெரிய அறிவியல். காலம் அறிந்தே மருத்துவம் செய்ய வேண்டும் என்பது தமிழரின் மருத்துவ விதி.

### அறுவை மருத்துவம்

அறுவை மருத்துவம் என்பது அறிவியல் வளர்ச்சியின் உச்சகட்ட நிலை. அறுவை சிகிச்சை செய்வதற்கு ஆய்வுக் கூடங்கள், நவீன மருத்துவக் கருவிகள், சிறந்த மருந்துகள், திறமையான மருத்துவர்கள் அவசியம். தமிழர்கள் அறுவை மருத்துவத்திலும் சிறந்து விளங்கியுள்ளனர். சிந்து, கங்கைச் சமவெளிகளில் வாழ்ந்த பழந்திராவிட மக்கள், அறுவை சிகிச்சை மேற்கொள்ள செப்புக் கத்திகளைப் பயன்படுத்தியிருக்கின்றனர் எனும் செய்தியைப் புதைபொருள் ஆய்வுகள் பதிவு செய்திருக்கின்றன. அறுவை சிகிச்சைக்குச் செம்பைப் பயன்படுத்தினால் எந்தப் பாதிப்பும் ஏற்படாது எனும் அறிவியலைத் தமிழர் அறிந்திருந்தனர்.போரில் காயம்பட்ட வீரர்களின் புண்களைத் தைத்த பின் மருந்திட்டுக் கட்டியுள்ளனர்எனும் செய்தியைப் பதிற்றுப்பத்துப் பதிவு செய்துள்ளது.

***மீன்தேர் கொட்பின் பனிக்கய மூழ்கிச்***
***சிரல்பெயர்ந் தன்ன நெடுவெள் ளூசி***
***நெடுவசி பரந்த வடுவாழ் மார்பின் (5:2)***

என்பது அப்பாடல். அதோடு எவ்வளவு நேர்த்தியாக அறுவை சிகிச்சை செய்யப்பட்டது என்பதையும் இப்பாடல் தெளிவுபடுத்துகிறது. நீரிலுள்ள மீனைக் கொத்துவதற்கு நீரில் பாய்ந்து மீனைக் கவர்ந்துவிட்டு, அடுத்த நொடியே நீரை விட்டு வேகமாகப் பறந்து மேலே செல்லும் சிரல் பறவையைப் போல, நெடிய வெள்ளூசி புண்ணுக்குள் நுளைந்து வெளியே வருகிறதுஎனும் செய்தி நம்மை வியப்பில் ஆழ்த்துகிறது. வெள்ளூசி என்பது வெள்ளியால் செய்யப்பட்ட தையல் ஊசியாக இருக்கலாம் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

கம்பராமாயணப் பாடல் ஒன்றும் அறுவை பற்றிக் குறிப்பிடுகிறது. உடலில் தோன்றியபுண்ணை அறுத்து அதன் உதிரத்தை வெளியேற்றி மருத்துவம் செய்தனர் என்பதை விபீடணன் கும்பகர்ணனிடம் கூறுவதாகக் கம்பர் குறிப்பிடுகிறார்.

**"உடலிடைத் தோன்றிற் றொற்றை**
**அறுத்ததின் உதிரம் ஊற்றித்**
**துடறுறச் சுட்டு வேறொர் மருந்தினால்**
**துயரம் தீர்வர்" (கும்ப.வதைப்.46)**

என்பது அப்பாடல். இவையெல்லாம் தமிழரின் அறிவியல் அறிவிற்கான சிறந்த சான்றுகளாகும்.

## முடிவுரை

பழம்பெரும் நாகரிகமும் பண்பாடும் கொண்ட தமிழரின் அறிவுத் திறன் எண்ணியெண்ணி வியத்தற்குரியது. அவர்தம் அறிவியல் அறிவினை விளக்க பல்வேறு சான்றுகள்

இலக்கியங்களிலும், கல்வெட்டுக்களிலும், புதைபொருள் ஆய்வுகளிலும் காணக்கிடக்கின்றன. சுருக்கம் கருதி ஒருசில இலக்கியச் சான்றுகளை மட்டுமே கருத்தில் கொண்டு தமிழர் மருத்துவம் வழி அறியலாகும் அவர்தம் அறிவியல் அறிவு குறித்து இக்கட்டுரை தொட்டுக் காட்டியுள்ளது.

## துணைநூல் பட்டியல்

1. கம்பராமாயணம்
2. கலித்தொகை
3. தொல்காப்பியம் பொருளதிகாரம்
4. பதிற்றுப்பத்து
5. புறநானூறு